www.tamilarangam.net

# அரச ஊழியர்களுக்கு!

இந்த யுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் நீங்கள் எத்தனை இன்னல்களை அனுபவித்திருக்கிறீர்கள்.

உங்களில் எத்தனை பேர் கடமையின் பொழுது படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்

அகதிகளாக இடம்பெயர்ந்த எத்தனை அரச ஊழியர்கள் அன்றாடத் தேவைகளுக்குத் திண்டாடுகிறார்கள்.

திரும்பவும் தமது இடங்களுக்கு வந்து தமது வேலைகளைக் கோரியபோது எவ்வளவு அவமானங்களை, அலைச்சல்களைச் சந்திக்க வேண்டியிருக்கின்றது.

அவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள் பலசிரமங்களின் மத்தியில் திரும்பவும் வேலைகளைப் பெற்றாலும் அவர்கள் எத்தனை வருடங்களுக்கு முன் வேலை இழந்தார்களோ அப்போதிருந்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டே இப்போதும் வழங்கப்படுகின்றது.

இந்த தொழிலாளர் விரோத, மக்கள் விரோத ஐ. தே. க. அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் 40 ஆயிரம் அரச ஊழியர்களை வேலை நீக்கம் செய்து வீதிக்கு விரட்டியது அவர்களில் எத்தனை பேர் வறுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார்கள்.

மூச்சைத் திணற வைக்கும் விலைவாசி ஏற்றத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் நீங்கள் உங்களிடம் வரியாக அறவிடப்படும் பணத்தில் இந்த ஐ. தே. க. அரசு குண்டுகளையும், பீரங்கிகளையும், டாங்கிகளையும் இறக்குமதி செய்கின்றது. உங்கள் வயிற்றிலடித்து பட்டினிபோட்டுக் கொல்வதோடு குண்டுகளும் எமது பகுதிகளில் போடப்படுகின்றன.

இதற்கு அரச காரியாலயங்களும் விதி விலக்கல்ல. யாழ்ப்பாணம் கச்சேரியின் மீது நடைபெற்ற விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல் நல்லதோர் உதாரணம்.

தூர இடங்களில் வேலை செய்வோர் போக்குவரத்தின் போதும் அபாயங்களை எதிர்நோக்குகிறார்கள்.

இத்தகைய அவலங்களுக்கெல்லாம் முடிவுகட்டப்பட வேண்டுமானால் ஆளும் ஐ. தே. க இத்தேர்தலில் தோற்கடிக்கப்படுவது பிரதான விடயமாகும்.

இரண்டாவதாக அதற்கு அடிவருடிப் பிழைப்பு நடத்தும் தமிழ் அரசியல் சக்திகள் தோற்கடிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் மீது ஆளும் ஐ. தே க அரசினால் திணிக்கப்பட்டுள்ள கொடூர யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

நாடளாவிய அளவில் ஏற்படக்கூடிய ஆட்சி மாற்றத்துடன் தமிழ் மக்களின் எரியும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான நிர்ப்பந்தமும், நெருக்குவாரமும் கொண்டுவரப்பட வேண்டும்.

எல்லவற்றிற்கும் மேலாக நாம் சிறிதளவாவது நிம்மதிப்பெருமூச்சுவிட, சுதந்திரமாகச் சீவிக்கும் நிலவரங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

அரசு, அரசு சார்ந்த, ஏனைய எல்லாவித ஆயுத அச்சுறுத்தல்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

அரச ஊழியர்களே! நீங்கள் அறிவுஜீவிகள் கருத்தறிவு பூர்வமாக எதையும் பார்க்கக் கூடியவர்கள்.

17 வருடமும் தமிழ்மக்களை விட்டு எங்கோ ஓடி ஒழிந்து அஞ்ஞாத வாசம் செய்த பழசாப்போன அரசியல் வாதிகள் தமிழ் மக்கள் 60 ஆயிரம் பேர் இறந்ததன் பின் தமிழ் மக்களுக்கு கருமாரி செய்யவா வந்திருக்கிறார்கள். வெட்கம், ரோசம், மானம் எதுவுமின்றி எந்த முகத்துடன் வாக்குப்பிச்சை கேட்கிறார்கள். இத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் இறந்த போது இவர்கள் எங்கே சென்றிருந்தார்கள்

எல்லோரையும் சீர்தூக்கிப் பார்த்து எதிர்வரும் தேர்தலில் சரியான முடிவை எடுத்துச் செயற்படுமாறு ஈ. பி. ஆர். எல். எவ். வேண்டுகோள் விடுக்கின்றது.

நன்றி

ஈ. பி. ஆர். எல். எவ்.

**E. P. R. L. F.**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்